# மனித உரிமைகளை
# உறுதிப்படுத்தும் பொறிமுறைகள்

ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA

# மனித உரிமைகளை உறுதிப்படுத்தும் பொறிமுறைகள்

ISBN 978-955-8929-20-9

முதற் பதிப்பு : 2015

பதிப்பு: : மெனிக் அச்சகம்
161,தெமட்டகொட வீதி, கொழும்பு 09.

ஆலோசகர்கள்: : சட்டத்தரணி நிமால் ஜி புஞ்சிகேவா
சட்டத்தரணி சமந்தி ஜயமான பரணகம

ஆக்கம்: : சட்டத்தரணி மேனகா ஹேரத்
சட்டத்தரணி க. கபிலன் வில்லவராஜன்

உதவி : துஷாரா ஜீவந்தி

வெளியீடு : இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
இல. 165, கின்சி வீதி, கொழும்பு 08.

ISBN 978-955-8929-20-9

**பொருளடக்கம்** **பக்கம்**

அறிமுகம் iv

1.0 சர்வதேச பொறிமுறை 1
1.1 பட்டய அடிப்படையிலான மனித உரிமை பொறிமுறைகள் 3
1.1.1 ஐக்கிய நாடுகளின் பொருளாதார சமூக பேரவை 3
1.1.2 பெண்களின் சமூக அந்தஸ்து நிலைக்கான ஆணைக்குழு 4
1.1.3 மனித உரிமைகள் பேரவை 4
1.1.4 நீதிக்கான சர்வதேச நீதிமன்றம் 8

1.2 உடன்படிக்கை அடிப்படையிலான மனித உரிமை பொறிமுறைகள் 9
1.2.1. உடன்பாட்டு அமைப்புக்களின் செயற்பாடுகள் 9
1.2.2. மனித உரிமைகள் உடன்படிக்கை அமைப்பின் முறைப்பாட்டு நடபடிமுறைகள் 12
1.2.3. தனிப்பட்ட முறைப்பாடுகள் 12
1.2.4. யார் முறைப்பாட்டினை செய்யமுடியும் ? 14
1.2.5 முறைப்பாட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய தகவல்கள் 14
1.2.6 முறைப்பாட்டினை ஏற்றுக்கொள்வதற்கான தகமைகள் 14
1.2.7. நாடுகளிற்கிடையிலான முறைப்பாடுகள் 17
1.2.8. விசாரணைகள் 18

1.3 ஏனைய சர்வதேச பொறிமுறைகள் 19
1.3.1 ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளிற்கான உயர்தானிகர் அலுவலகம் 19
1.3.2 சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் 20

2.0 பிராந்திய மனித உரிமை பொறிமுறைகள் 22

3.0 தேசிய மனித உரிமை பொறிமுறைகள் 24
3.1 அடிப்படை உரிமை அடிப்படையிலான பொறிமுறைகள். 23
3.1.1 உயர் நீதிமன்றம் 24
3.1.2 பாராளுமன்றத்திற்குரிய நிர்வாக ஆணையாளர் 26
3.1.3 இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு 27
3.2 ஏனைய மனித உரிமை பொறிமுறைகள் 30
3.2.1 சட்ட உதவி ஆணைக்குழு 30
3.2.2 சட்ட ஆணைக்குழு 31
3.2.3 இணக்கசபை 31
3.2.4 ஜனாதிபதி விசேட விசாரணை ஆணைக்குழு 32
3.2.5 ஏனைய பொறிமுறைகள் 33

**இணைப்பு 1:** சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் தொடர்பு விபரங்கள் 37
**இணைப்பு 2:** தேசிய மனித உரிமைகள் அமைப்புக்களின் விபரங்கள் 41
**இணைப்பு 3:** இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் தொடர்பு கொள்ளும் வழிமுறைகள் 44

## அறிமுகம்

தற்போது மனித உரிமைகளை பாதுகாக்க, முன்னேற்ற, கண்காணிக்க மற்றும் இவை தொடர்பாக ஆலோசனை வழங்கவென பல்வேறு மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 1945 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது முதல் மனித உரிமைகள் தொடர்பாக புத்துணர்வு தோற்றம் பெற்றதுடன் அது பல்வேறு படிமுறைகளை கடந்து புதிய அத்தியாயம் தோற்றம்பெற வழிவகுத்தது.

மேலும் 1948 ஆண்டு டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் அதனை அடிப்படையாகக்கொண்டு காலத்திற்கு காலம் உருவாக்கப்பட்ட பல்வேறு சர்வதேச மனித உரிமைகள் உடன்பாட்டு ஒப்பந்தங்களும் பிராந்திய உடன்பாட்டு ஒப்பந்தங்களும் சர்வதேச மற்றும் பிராந்திய மனித உரிமை பொறிமுறைகளை உருவாக்க வழிவகுத்தன.

அதேவேளை நாடுகளானவை சர்வதேச மனித உரிமை தராதரங்களை தமது அரசியலமைப்புகளிலும் நியதிச்சட்டங்களிலும் உள்வாங்கி அதற்கமைய தேசிய மனித உரிமை பொறிமுறைகளை உருவாக்கியும் வலுப்படுத்தியும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்லாது தேசிய பொறிமுறையின் மூலம் திருப்திகரமான தீர்வினை பெற்றுக்கொள்ள முடியாத சந்தர்ப்பத்தில் பிராந்திய மற்றும் சர்வதேச பொறிமுறைகளை மக்கள் நாடுவதற்குரிய பல்வேறு புதிய வழிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச பொறிமுறைகள் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு மற்றும் உறுதிப்படுத்துவதற்கு வினைத்திறனாகவும் நேர்த்தியாகவும் மற்றும் நியாயமாகவும் செயற்பட வேண்டிய தேவையுள்ளது. அதேவேளை மக்களும் இப்பொறிமுறைகள் தொடர்பான தெளிவினை பெறுவதுடன் அவற்றை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும். அப்போதே இவ் பொறிமுறைகள் உருவாக்கப்பட்டதன் நோக்கத்தை அடையமுடியும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

இதனைக்கருத்திற் கொண்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது மனித உரிமைகள் பொறிமுறைகள் தொடர்பாக தெளிவனை பெற்றுக்கொள்ள இச்சிறு கைநூலினை ஆக்கியுள்ளது. இதன் மூலம் மக்கள் பயன் அடைந்து நாட்டின் சிறந்த மனித உரிமைகள் கலாச்சாரத்தை நிலைநிறுத்த பங்களிப்பார்களென நம்புகின்றோம்.

## 1.0 சர்வதேச பொறிமுறை

மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் ஊக்குவிக்கவுமும் பல்வேறு பொறிமுறைகள் காணப்பட்டபோதிலும் அப்பொறிமுறைகளை பிரதானமாக மூன்றாக வகைப்படுத்தலாம். அவையாவன.

- சர்வதேசப் பொறிமுறை
- பிராந்தியப் பொறிமுறை
- தேசியப் பொறிமுறை

சர்வதேச மனித உரிமை பொறிமுறைகளின் அடித்தளமாக 1945 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் தோற்றமும் அதன் பட்டயமும் காணப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் சபையானது மனித உரிமைகளையும் அடிப்படை சுதந்திரங்களையும் பாதுகாப்பதற்குரிய உலகக்கட்டமைப்பை உருவாக்கியுள்ளது. சர்வதேசரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டதும் உலகளாவிய மனித உரிமைகளிற்குரிய சர்வதேச நியாயாதிக்கத்தினை கொண்டுள்ளதுமான ஒரேயொரு பல்லரச அமைப்பாக ஐக்கிய நாடுகள் சபை இருக்கின்றது.



*படம் 1 : ஐக்கிய நாடுகள் பொதுச்சபை*

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பாதுகாப்பு கட்டமைப்பானது மூன்று பிரதான பகுதிகளைக் கொண்டுள்ளது. அவையாவன,

1. ஐக்கிய நாடுகளின் பட்டயம், சட்டரீதியாக பிணிக்கப்பட்ட உடன்படிக்கைகள், பிணிக்கப்படாத பிரகடனங்கள், ஒப்பந்தங்கள் மற்றும் ஆவணங்கள் ஊடாக சர்வதேச தராதரங்களை தாபிக்கின்றமை.

2. விசேட பிரதிநிதிகள், நிபுணர்கள் மற்றும் தொழிற்பாட்டுக்குழுக்கள், செயற்குழுக்கள் மற்றும் உடன்பாட்டு அமைப்புக்கள் போன்ற குழுக்களை உருவாக்குதல்.

3. மனித உரிமைகள் விடயத்திற்கான தொழிநுட்ப உதவிகளிற்கும் மதியுரை வசதிகளிற்கும் தன்னிச்சையான நிதியமூடாக தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்.

ஐக்கிய நாடுகள் சபையானது மனித உரிமை விடயங்கள் தொடர்பில் பின்வரும் அடிப்படையில் பொறிமுறைகளை உருவாக்கி பாதுகாப்பினை உத்தரவாதப்படுத்தியுள்ளது. அவையாவன,

- பட்டயத்தின் அடிப்படையிலான பொறிமுறைகள்
  (Charter Based Mechanisms)

- உடன்படிக்கை அடிப்படையிலான பொறிமுறைகள்
  (Treaty Based Mechanisms)

பட்டயத்தின் அடிப்படையிலான பொறிமுறைகள் என்பது ஐக்கிய நாடுகள் பட்டயத்தின் ஏற்பாடுகளுக்கமைய உருவாக்கப்பட்ட பொறிமுறைகளையாகும். உடன்படிக்கை அடிப்படையிலான பொறிமுறைகள் என்பது பிரதானமாக சட்டரீதியான ஆவணங்கள் மூலம் உருவாக்கப்பட்ட பொறிமுறைகளை கொண்டுள்ளது. பட்டய அடிப்படையிலான பொறிமுறைக்கும் உடன்படிக்கை அடிப்படையிலான பொறிமுறைகளுக்கும் இடையிலான ஒப்பீடு பின்வருமாறு,

| பட்டய அடிப்படையிலான அமைப்பு | உடன்படிக்கை அடிப்படையிலான அமைப்பு |
|---|---|
| ஐக்கிய நாடுகள் பட்டயத்தின் ஏற்பாடுகளுக்கமைய தாபிக்கப்படுகின்றன. | சட்டரீதியான உடன்படிக்கை ஆவணங்களின் ஏற்பாடுகள் மூலம் தாபிக்கப்படுகின்றன. |
| பரந்த மனித உரிமைகள் ஆணையினைக் கொண்டுள்ளது. | குறுகிய ஆணையைக் கொண்டது. ( அதாவது குறித்த சட்ட ஆவணத்தில் குறிப்பிட்ட விடயத்திற்கு மட்டும்.) |
| வரையறையற்ற அரங்கத்தினரை கருத்திற் கொள்ளும். | வரையறுத்த அரங்கத்தினரை மட்டும் கருத்திற் கொள்ளும். ( குறித்த சட்ட ஆவணத்தினை ஏற்று அங்கீகரித்த நாடுகள் மட்டும்.) |
| பெரும்பான்மையினரின் வாக்கின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | ஏகமனதாக தீர்மானங்கள் எடுக்கப்படும். |
| உதாரணம் :-<br>• பொருளாதார சமூக பேரவை<br>• பாதுகாப்பு சபை<br>• நீதிக்கான சர்வதேச நீதிமன்றம்<br>• நம்பிக்கை பொறுப்பு சபை | உதாரணம் :-<br>• மனித உரிமைகள் குழு<br>• பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் குழு<br>• சிறுவர் உரிமைகள் குழு<br>• சித்திரவதைக்கெதிரான உரிமைகள் குழு |

## 1.1 பட்டய அடிப்படையிலான மனித உரிமை பொறிமுறைகள்

பட்டய அடிப்படையிலான மனித உரிமை அமைப்புக்களிற்கு ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடுகளின் மனித உரிமை நடவடிக்கைகளை மீளாய்வு செய்யும் அதிகாரம் உள்ளது. அவ்வாறான அமைப்புக்கள் பின்வருமாறு,

### 1.1.1 ஐக்கிய நாடுகளின் பொருளாதார சமூக பேரவை (ECOSOC)

பொருளாதார சமூக பேரவையானது ஐக்கிய நாடுகளின் பிரதான 6 அமைப்புக்களில் ஒன்றாகும் இது 54 உறுப்பினர்கள் கொண்டு செயற்படும் அமைப்பாகும். இதன் உறுப்பினர்கள் 3 வருடத்திற்கு ஒருமுறை தெரிவுசெய்யப்படுவர். இது பிரதானமாக சமூக பொருளாதார வேலைத்திட்டங்களை சர்வதேச தொழிலாளர் தாபனம், உலக சுகாதார தாபனம் உட்பட 14 ஐக்கிய நாடுகளின் சிறப்பு முகவரமைப்புக்கள் மூலமும்

பெண்களின் சமூக அந்தஸ்துக்கான ஆணைக்குழு உள்ளடங்களாக பல்வேறு ஆணைக்குழுக்கள் ஊடாகவும் செயற்படுத்திவருகின்றது. இது ஐக்கிய நாடுகளின் பொதுச்சபைக்கு இவ்வுரிமைகள் தொடர்பில் பரிந்துரைகளை வழங்கும்.

2006 ஆம் ஆண்டு வரை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் இவ்வமைப்பின் கீழ் தொழிற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### 1.1.2 பெண்களின் சமூக அந்தஸ்து நிலைக்கான ஆணைக்குழு

இது பொருளாதார சமூக பேரவையின் கீழ் தொழிற்படுகின்றது. இது பால் நிலை சமத்துவத்தின் அடைவு, சவால்களை இனங்காணல், உலகத்தரங்களை நியமித்தல் மற்றும் உலகளாவியரீதியில் பெண்களின் பால்நிலை சமத்துவத்தினை ஊக்குவித்தல் தொடர்பாக திடமான கொள்கைகளை உருவாக்குதல் ஆகியவற்றை மதிப்பீடு செய்கின்றது.

### 1.1.3 மனித உரிமைகள் பேரவை (Human Rights Council)

மனித உரிமைகள் பேரவையானது ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 60/251 இலக்க பிரகடனம் மூலம் 2006 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 15 ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவை பிரதியீடு செய்து தாபிக்கப்பட்டது.



*படம் 2 : மனித உரிமைகள் பேரவை*

இது ஐக்கிய நாடுகள் கட்டமைப்பின் அரசாங்கங்களிற்கு இடையிலான அமைப்பாகும். இச்சபையில் 47 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இது புவியில் சமத்துவரீதியான பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ளது. அவையாவன,

| வலயம் | பிரதிநிதிகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஆபிரிக்க நாடுகள் | 13 |
| ஆசிய நாடுகள் | 13 |
| இலத்தின் அமெரிக்க மற்றும் கரிபியன் நாடுகள் | 08 |
| மேற்கு ஐரோப்பாவும் ஏனைய நாடுகளும் | 07 |
| கிழக்கு ஐரோப்பிய நாடுகள் | 06 |

இதன் அங்கத்தவர்கள் மூன்று ஆண்டுகளுக்கு தொழிற்படுவர். இவ்வமைப்புக்கு உலகளாவியரீதியில் மனித உரிமைகள் பாதுகாப்பினையும் ஊக்கவிப்பதனையும் வலுப்படுத்தும் பொறுப்புள்ளது. இது பல்வேறுபட்ட செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. இதன் பிரதான செயற்பாடுகள் பின்வருமாறு,

- முறைப்பாட்டு நடபடிமுறை (Communication Procedure)
- பூகோள காலாந்த மீளாய்வு ( Universal Periodic Review)
- விசேட நடபடிமுறைகள் (Special Procedures)

### (அ) முறைப்பாட்டு நடபடிமுறை

மனித உரிமைகள் பேரவையானது உலகின் ஏதேனும் பகுதியில் மற்றும் ஏதேனும் சூழ்நிலைகளின் கீழ் ஒத்தமாதிரியான, ஒட்டுமொத்தமான மற்றும் நம்பகமான சான்றளிக்கப்படக்கூடிய மனித உரிமைகள் மற்றும் சகல அடிப்படை சுதந்திரங்களின் மீறல்களை விசாரணை செய்வதற்குரிய புதிய முறைப்பாட்டு நடபடிமுறையினை ஏற்றுக்கொண்டுள்ளது.

முறைப்பாட்டு நடபடிமுறையானது பக்கச்சார்பற்றதாகவும், குறித்த நோக்கினைக் கொண்டதாகவும், வினைத்திறனானதாகவும், பாதிக்கப்பட்ட நபரினை மையப்படுத்தியதாகவும் மற்றும் உரிய காலத்தில் இடம்பெறுவதாகவும் இருத்தல் வேண்டும்.

முறைப்பாடு தொடர்பில் பேரவையின் கவனத்திற்கு கொண்டுவருவதற்கும் முறைப்பாட்டினை பரிசீலனை செய்வதற்குமுரிய ஆணையுடன்கூடிய இரண்டு வெவ்வேறு தொழிற்பாட்டுக் குழுக்களான முறைப்பாட்டிற்குரிய தொழிற்பாட்டுக்குழு மற்றும் நிலமைக்குரிய தொழிற்பாட்டுக்குழு ஆகியன தாபிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாடுகளுக்குரிய தொழிற்பாட்டுக்குழு முறைப்பாட்டினை ஏற்றுக் கொள்ளல் மற்றும் தகுதிமுறையினை மதிப்பீடு செய்கிறது.

நிலைமைக்குரிய தொழிற்பாட்டுக்குழு முறைப்பாடு தொடர்பில் அரசினால் அளிக்கப்பட்ட பதிலினை பரிசீலனை செய்யவும் மேலும் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற பரிந்துரையையும் பேரவைக்கு வழங்கும்.

### (ஆ) பூகோள காலாா்ந்த மீளாய்வு

மனித உரிமைகள் பேரவையினால் ஐக்கிய நாடுகளின் 193 உறுப்பு நாடுகளின் மனித உரிமை நிலவரங்களை 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை மீளாய்வு செய்வதற்கு உருவாக்கப்பட்ட தனித்துவமான செயன்முறையாகும்.

பூகோள காலாா்ந்த மீளாய்வானது அரசுகளினால் இயக்கப்படும் ஓா் செயன்முறையாகும். இதன்போது மனித உரிமைகள் நிலமைகளை முன்னேற்றுவதற்கும் அவா்களின் மனித உரிமைகள் கடப்பாட்டினை பூரணப்படுத்துவதற்கும் எவ்வாறான நடவடிக்கையினை எடுத்துள்ளது என்பதை பிரகடனப்படுத்த ஒவ்வொரு நாட்டிற்கும் சந்தா்ப்பம் வழங்கப்படுகின்றது.

ஒவ்வொரு நாட்டின் அறிக்கை, சிவில் சமூக அமைப்புக்களின் அறிக்கை, தேசிய மனித உரிமைகள் நிறுவனங்களின் அறிக்கை மற்றும் ஐக்கிய நாடுகள் முகவா் அமைப்புக்களின் அறிக்கை என்பன கருத்திலெடுக்கப்பட்டு அங்கத்துவ நாடுகள் குறித்த நாட்டிற்கான பரிந்துரைகளை வழங்கும். குறித்த நாடு சகல நாடுகளினாலும் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளலாம் அல்லது மறுதழிக்கலாம்.

உதாரணம்: இலங்கையின் முதலாவது பூகோள காலாா்ந்த அறிக்கையானது 2008 ஆம் ஆண்டு மீளாய்வு செய்யப்பட்டது. இவ்மீளாய்விற்கு இலங்கை அரசினால் சமா்பிக்கப்பட்ட தேசிய அறிக்கை, ஐக்கிய நாடுகள்

முகவரமைப்பினாரால் கூட்டாக தயாரிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் உயர்தானிகர் காரியாலயத்தின் அறிக்கை, சிவில் சமூக அமைப்புக்களின் அறிக்கை மற்றும் அரசிடம் தொடுக்கப்பட்ட மேலதிக வினாக்கள் என்பன கருத்திற்கொள்ளப்பட்டது. இவ்மீளாய்வின் பின்னராக சக அரசுகளினால் முன்வைக்கப்பட்ட 77 பரிந்துரைகளில் இலங்கை அரசு 52 இனை ஏற்றுக்கொண்டதுடன் 25 இனை நிராகரித்தது. இலங்கையின் இரண்டாவது பூகோள காலாா்ந்த அறிக்கையானது 01.11.2012 மீளாய்வு செய்யப்பட்டது. இவ்மீளாய்விற்கு மேற்குறிப்பிட்ட அறிக்கைகளிற்கு மேலதிகமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கையும் சோ்த்துக்கொள்ளப்பட்டது. இவ்மீளாய்வின் பின்னராக சக அரசுகளினால் முன்வைக்கப்பட்ட 204 பரிந்துரைகளில் 113 இனை இலங்கை அரசு ஏற்றுக்கொண்டதுடன் 91 இனை நிராகரித்தது.

### (இ) விசேட நடபடிமுறைகள்

மனித உரிமைகள் பேரவையினால் குறிப்பிட்ட நாட்டின் மனித உரிமை் நிலைமைகளை அல்லது உலகின் சகல பகுதிகளிலுமுள்ள மனித உரிமை கருப்பொருள் விடயங்களை வெளிப்படுத்த விசேட நடபடிமுறைகள் ஒரு சிறந்த பொறிமுறையாகும்.

விசேட பிரதிநிதிகள் , சுதந்திரமான நிபுணா்கள் போன்ற தனிப்பட்ட அல்லது 5 உறுப்பினா்களைக் கொண்ட தொழிற்படும் குழுக்களாக விசேட நடபடிமுறை அமையலாம். இவ்விசேட நடபடிமுறை மூலம் ஆணையைக் கொண்டவா்கள் பரிசீலனை, கண்காணிப்பு, மதியுரைத்தல் மற்றும் குறித்த நாடுகளின் அல்லது எல்லைகளின் மனித உரிமை நிலவரங்களை பகிரங்கமாக அறிக்கையிடுகின்றனா்.

விசேட நடபடிமுறைமூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளாவன,

- தனிப்பட்ட முறைப்பாட்டிற்கு பதிலளித்தல்.
- ஆய்வுகளை மேற்கொள்ளல்.
- நாடுகள் ரீதியாக தொழில்நுட்ப கூட்டுறவுக்காக மதிப்புரையினை வழங்கல்.
- பொதுவான ஊக்குவிப்பு நடவடிக்கையில் ஈடுபடல்.

உதாரணம்: பின்வரும் விசேட பிரதிநிதிகள் விசேட நடபடிமுறைக்கமைய இலங்கைக்கு விஜயம் செய்து குறித்த  விடயம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்பித்துள்ளனர்.

- உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆட்களின் (IDPs) பொது மனித உரிமை நிலமைகளிற்கான விசேட பிரதிநிதி

- சித்தரவதை மற்றும் கொடூரமான இழிவான நடத்தை மற்றும் தண்டனைக்கெதிரான விசேட பிரதிநிதி

- நீதிக்கு புறம்பான ஏதேச்சையான நடவடிக்கைகள் தொடர்பான விசேட பிரதிநிதி

- மத மற்றும் நம்பிக்கைக்கான விசேட பிரதிநிதி

### 1.1.4 நீதிக்கான சர்வதேச நீதிமன்றம் (International Court of Justice)

ஐக்கிய நாடுகளின் பட்டயத்தினால் தாபிக்கப்பட்ட பிரதானமான அமைப்பாகும். இவ்நீதிமன்றமானது 15 நீதியரசர்களைக்கொண்டுள்ளது. இவ்நீதிமன்றமானது இரட்டை நியாயாதிக்கத்தினை கொண்டுள்ளது.



*படம் 3 : நீதிக்கான சர்வதேச நீதிமன்றம்*

இது நாடுகளினால் சமா்ப்பிக்கப்படும் சட்டப்பிணக்குகளை சா்வதேச சட்டத்திற்கமைய தீா்த்துவைக்கும். அதேவேளை அங்கீகரிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் அமைப்பினால் அல்லது தோ்ச்சிபெற்ற முகவரமைப்பினால் ஆற்றுப்படுத்தப்படும் சட்டக் கேள்விகளுக்கு மதியுரை கருத்துக்களையும் வழங்கும். இது கையாளும் பிணக்குகளினுள் நாடுகளின் மனித உரிமை விடயங்களும் உள்ளடக்கப்படும்.

## 1.2 உடன்படிக்கை அடிப்படையிலான மனித உரிமை பொறிமுறைகள்

சா்வதேச மனித உரிமைகள் உடன்படிக்கையின் கீழாக அரசின் சா்வதேச கடப்பாடுகளை நிலைநிறுத்துவதையும் அமுல்படுத்துவதையும் கண்காணிப்பதற்கும் ஊக்கமளிபதற்குமாக உடன்படிக்கை அமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

இவ்வமைப்புக்கள் சுயாதீனமான நிபுணா்களைக் கொண்டுள்ளதுடன் அவா்கள் மனித உரிமைகள் தொடா்பில் சிறந்த அனுபவசாலிகளாகவும் சிறந்த ஒழுக்கத்தரங்களைக் கொண்டவா்களாகவும் பக்கச்சாா்பற்றவா்களாகவும் இருப்பா்.

உடன்பாட்டு அமைப்பிலுள்ள அங்கத்தவா்களின் எண்ணிக்கையானது உடன்பாட்டு அமைப்புக்கு அமைப்பு வேறுபடும் . உடன்பாட்டு அமைப்புக்களின் விபரங்கள் அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 1.2.1. உடன்பாட்டு அமைப்புக்களின் செயற்பாடுகள்

- அரச திறத்தவா்களால் எப்படி உடன்படிக்கைகள் அமுல்படுத் - தப்படுகின்றன என்பதைக் கண்காணித்தல்.

- அரச திறத்தவா்களால் கிரமமாக சமா்பிக்கப்படும் அறிக்கைகளைப் பெற்றக் கொள்ளலும் கருத்திற் கொள்ளலும்.

- அரசுகள் அறிக்கை தயாரிப்பது தொடா்பில் உதவியளிப்பதற்காக வழிகாட்டல்களை வழங்கல்.

**அட்டவணை 1 : உடன்பாட்டு அமைப்புக்களின் விபரம்**

| மனித உரிமைகள் உடன்படிக்கை கண்காணிப்பு அமைப்பு | உடன்படிக்கை | தாபிதம் | உறுப்பினர்கள் எண்ணிக்கை | அறிக்கையிடல் ஒழுங்குமுறைமை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | முதலாவது அறிக்கை | காலாந்த அறிக்கை | கூட்ட எண்ணிக்கை ஆண்டு | கூட்டத்தொடர் கால அளவு | கூட்ட காலம் | கூட்ட இடம் |
| இனப் பாரபட்சத்தினை இல்லாதொழிக்கும் குழு | இனப்பாரபட்சத்தினை இல்லாதொழிக்கும் சர்வதேச சமவாயம் | 1969 | 18 | 1 ஆண்டுக்குள் | 2 வருடங்கள் | 2 கூட்டங்கள் | 3 கிழமை | பெப்ரவரி, ஒகஸ்ட் | ஜெனீவா |
| பொருளாதார, சமூக , கலாசார உரிமைகள் குழு | பொருளாதார, சமூக, கலாசார உரிமைகளிற்கான சர்வதேச பொருத்தனை | 1987 | 18 | 2 ஆண்டுக்குள் | 5 வருடங்கள் | 2 கூட்டங்கள் | 3 கிழமை கூட்டத்திற்கு முன் 1 கிழமை | மே, நவம்பர் | ஜெனீவா |
| மனித உரிமைகள் குழு | குடியியல் அரசியல் உரிமைகளிற்கான சர்வதேச பொருத்தனை | 1976 | 18 | 1 ஆண்டுக்குள் | 4 வருடங்கள் | 3 கூட்டங்கள் | 3 கிழமை | மார்ச், யூலை, நவம்பர் | நியூயோர்க், ஜெனீவா |
| பெண்களின் பாரபட்சத்திற்கு எதிரான குழு | பெண்களிற்கு எதிரான பாரபட்சத்தினை இல்லாதொழிக்கும் சர்வதேச சமவாயம் | 1982 | 23 | 1 ஆண்டுக்குள் | 4 வருடங்கள் | 2 கூட்டங்கள் | 3 கிழமை | ஜனவரி, யூலை | நியூயோர்க் |
| சித்திரவதை-க்கெதிரான குழு | சித்திரவதைக்கெதிரான சமவாயம் | 1988 | 10 | 1 ஆண்டுக்குள் | 4 வருடங்கள் | 2கூட்டங்கள் | 3 கிழமை | நவம்பர் | ஜெனீவா |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சிறுவர் உரிமைகுழு | சிறுவர் உரிமைகள் சமவாயம் | | | 2 ஆண்டுக்குள் | 5 வருடங்கள், | 3கூட்டங்கள் | 3 கிழமை | ஜனவரி, மே, செப்டம்பர் | ஜெனீவா |
| | சிறுவர் உரிமை சமவாயத்தின் ஆயுத மோதல் தொடர்பில் விருப்பத்திற்குரிய பின்னேடு<br>சிறுவர் உரிமைகள் சமவாயத்தின் சிறுவர் | 1990 | 18 | 2 ஆண்டுக்குள்<br>2 ஆண்டுக்குள் | 5 வருடங்கள் அடுத்த சிறுவர் சமவாய அறிக்கையுடன்,<br>5 வருடங்கள் | | | | |
| | விற்பனை விபச்சாரம், ஆபாச படமெடுத்தல், விருப்பத்திற்குரிய பின்னேடு | | | | / அடுத்த சிறுவர் உரிமைகள் சமவாயத்தின் அறிக்கையுடன் | | | | |
| புலம்பெயர் தொழிலாளர் குழு | புலம்பெயர் தொழிலாளர் உரிமை சமவாயம் | 2004 | 10 | 1 ஆண்டுக்குள் | 5 வருடங்கள் | 2 கூட்டங்கள் | 1 கிழமை | ஏப்ரல், நவம்பர், டிசம்பர் | ஜெனீவா |
| மாற்று ஆற்றலுடைய உரிமைகள் குழு | மாற்று ஆற்றலுடைய உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் | 2006 | 18 | 2 ஆண்டுக்குள் | 4 வருடங்கள் | 2 கூட்டங்கள் | 1 கிழமை | ஏப்ரல், செப்டம்பர் | ஜெனீவா |
| பலவந்தமாக காணாமல் போதல் குழு | பலவந்தமாக காணாமற் போகும் நபர்களை பாதுகாப்பதற்கான சமவாயம் | 2006 | 10 | 2 ஆண்டுக்குள் | 2 வருடங்கள் | 2 கூட்டங்கள் | 1 கிழமை | அட்டவணை மாறுபடும் | ஜெனீவா |

- உடன்படிக்கைகளில் உள்ள ஏற்பாடுகளை பொருள்கோடல் செய்து பொதுக்கருத்துக்களை விரிவுபடுத்தல்.

- உடன்படிக்கையுடன் தொடர்பான கருப்பொருள் தொடர்பில் கலந் - துரையாடல்களை ஒழுங்கு செய்தல்.

- அரச திறத்தவர்கள் உடன்படிக்கைகளை அமுல்படுத்தலினை வலுப்படுத்தல்.

- அரச திறத்தவர்களால் மீறப்படும் தனிப்பட்டவர்களின் உரிமைகள் தொடர்பான முறைப்பாடுகளை கருத்திற்கொள்ளல்

### 1.2.2. மனித உரிமைகள் உடன்படிக்கை அமைப்பின் முறைப்பாட்டு நடபடிமுறைகள்

மனித உரிமைகள் உடன்படிக்கை அமைப்புக்கு முன்னால் மனித உரிமைகள் உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகள் மீறப்படல் தொடர்பான முறைப்பாடுகளைக் கொண்டுவர பிரதானமாக மூன்று நடைமுறைகள் உள்ளன. அவையாவன.

- தனிப்பட்ட முறைப்பாடுகள்

- நாடுகளிற்கிடையிலான முறைப்பாடுகள்.

- விசாரணைகள்

இருப்பினும் எல்லா மனித உரிமைகள் குழுக்களுக்கும் இவ்வாறான முறைப்பாடுகளைக் கையாளும் உரிமை இல்லை.

### 1.2.3. தனிப்பட்ட முறைப்பாடுகள்

மனித உரிமைகள் உடன்படிக்கை அமைப்புக்கள் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தின் கீழ் தனிப்பட்டவர்களின் முறைப்பாடுகளை கையாளுகின்றன. அட்டவணை 2 இல் குறித்த அமைப்புக்களின் முறைப்பாட்டு நடைமுறைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 2 : மனித உரிமை அமைப்புக்களின் முறைப்பாட்டு நடபடிமுறைகள்

| உடன்படிக்கை அமைப்பு | முறைப்பாட்டு நடபடிமுறைகள் |
|---|---|
| மனித உரிமைகள் குழு (HRC) | குடியியல் அரசியல் உரிமைகளிற்கான சமவாயத்தின் முதலாவது விருப்பத்திற்குரிய பின்னேட்டிற்கமைய அரச திறத்தவர்கள் தொடர்பான தனிப்பட்ட முறைப்பாடுகள் கருத்திற்கொள்ளப்படும். |
| பெண்களிற்கெதிரான பாரபட்சத்தினை இல்லாதொழிக்கும் குழு(CEDAW) | பெண்களிற்கு எதிரான பாரபட்சங்களை இல்லாதொழிக்கும் சமவாயத்தின் விருப்பத்திற்குரிய பின்னேட்டிற்கமைய அரச திறத்தவர்கள் தொடர்பான தனிப்பட்ட முறைப்பாடுகள் கருத்திற்கொள்ளப்படும். |
| சித்திரவதைக்கெதிரான குழு (CAT) | சித்திரவதைக்கெதிரான சமவாயத்தின் உறுப்புரை 22 இற்கமைய அரச திறத்தவர்கள் தொடர்பான தனிப்பட்ட முறைப்பாடுகள் கருத்திற்கொள்ளப்படும். |
| இனப்பாரபட்சத்தினை இல்லாதொழிக்கும் குழு(CERD) | இனப்பாரபட்சத்தினை இல்லாதொழிக்கும் சமவாயத்தின் உறுப்புரை 14 இற்கமைய அரச திறத்தவர்கள் தொடர்பான தனிப்பட்ட முறைப்பாடுகள் கருத்திற்கொள்ளப்படும். |
| மாற்று ஆற்றலுடைய ஆட்களின் உரிமைகளிற்கான குழு (CRPD) | மாற்று ஆற்றலுடைய ஆட்களின் உரிமைகளிற்கான சமவாயத்தின் விருப்பத்திற்குரிய பின்னேட்டிற்கமைய தனிப்பட்ட முறைப்பாடுகளைச் செய்யலாம். |
| புலம்பெயர் தொழிலாளர் குழு (CMW) | புலம்பெயர் தொழிலாளர் சமவாயத்தின் உறுப்புரை 77 இற்கமைய அரச திறத்தவர்கள் தொடர்பான தனிப்பட்ட முறைப்பாடுகள் கருத்திற்கொள்ளப்படும். |
| பலவந்தமாக காணமற்போதலுக்கான குழு (CEDP) | பலவந்தமாக காணாமற்போகும் ஆட்களின் பாதுகாப்பதற்கான சமவாயத்தின் உறுப்புரை 31 இற்கமைய அரச திறத்தவர்கள் தொடர்பான தனிப்பட்ட முறைப்பாடுகள் கருத்திற்கொள்ளப்படும். |
| பொருளாதார சமூக கலாசார உரிமைகள் குழு (CESC) | பொருளாதார சமூக கலாசார உரிமைகளிற்கான பொருத்தனையின் விருப்பத்திற்குரிய பின்னேட்டிற்கமைய தனிப்பட்ட முறைப்பாடுகளைச் செய்யலாம். |
| சிறுவர் உரிமைகள் குழு (CRC) | சிறுவர் உரிமைகள் சமவாயத்தின் விருப்பத்திற்குரிய பின்னேட்டிற்கமைய தனிப்பட்ட முறைப்பாடுகளைச் செய்யலாம். |

### 1.2.4. யார் முறைப்பாட்டினை செய்யமுடியும் ?

குறிப்பிட்ட குழுவிற்கு முன்னால் குறித்த சமவாயத்தில் அல்லது பொருத்தனையில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமை மீறப்பட்ட நபரினால் குறித்த அரசுக்கு எதிராக முறைப்பாடு செய்யலாம். இருப்பினும் அரச திறத்தவர் குறித்த குழு முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளும் வல்லமையுள்ளது என்பதினை அங்கீகரித்திருக்க வேண்டும். தனிப்பட்டவர்கள் சார்பாக அவர்களின் எழுத்து மூலமான சம்மதம் அல்லது சம்மதம் வழங்க ஆற்றல் இல்லாதவர்கள் மூன்றாம் திறத்தவராலும் முறைப்பாடு செய்யப்படலாம்.

### 1.2.5 முறைப்பாட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய தகவல்கள்

பிரத்தியேகமான விண்ணப்பங்கள் எதுவுமில்லை. இருப்பினும் அத்தியவசியமான தகவல்களை பூரணமாக வழங்க வேண்டும். குறிப்பாக பின்வருவன உள்ளடக்கப்படல் வேண்டும்

- கோரிக்கை எழுத்து மூலமாகவும் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.
- பிரத்தியேக அடிப்படைத்தகவலான பெயர், தேசியம் மற்றும் பிறந்த திகதி என்பவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- எந்த அரச திறத்தவர்களிற்கு எதிராக முறைப்பாடு செய்யப்படுகி - ன்றது எனக்குறிப்பிடல் வேண்டும்.
- பிறிதொருவர் சார்பாக கோரிக்கை செய்பவராயின் அவரது சம்மதத் திற்கான ஆதாரம் சமர்ப்பிக்க வேண்டும். இல்லாவிட்டால் ஏன்அவ் சம்மதத்தினை வழங்க முடியவில்லை என்பது குறிப்பிடப்படல் வேண்டும்.

### 1.2.6 முறைப்பாட்டினை ஏற்றுக்கொள்வதற்கான தகமைகள்

குழுவானது முறைப்பாட்டினை ஏற்றுக்கொள்வதாயின் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட காரணிகளைக் கருத்திற் கொள்ளும். அவை பின்வருமாறு,

- பிரிதொரு நபர் சார்பாக ஒரு நபர் செயற்படுவாராயின் அவர் போதுமான அங்கிகாரத்தினை பெறவேண்டும் அல்லது அவர்கள் செயற்பாட்டினை நியாயப்படுத்தல் வேண்டும்.

- பாதிக்கப்பட்ட நபரின் மீறப்பட்ட அல்லது மீறப்பட்டுக்கொண்டிருக்கின்ற உரிமைகளானவை அரச திறத்தவரின் சட்டம், கொள்கை, கையாள்கை, செயல் அல்லது தவிர்ப்பு ஆகியவற்றினால் தனிப்பட்ட முறையில் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ளமையை எண்பிக்க வேண்டும்.

- உடன்படிக்கையில் உண்மையாக பாதிக்கப்படும் உரிமையுடன் தொடர்புடைய மீறலாக இருக்க வேண்டும்.

- முறைப்பாட்டின் தகவலை மற்றும் பொருந்தனையின் மீறல் தொடர்பான விடயங்கள் போதியளவில் வழங்கவில்லையென குழு கருதினால் ஏற்றுக்கொள்ளாது.

- முறைப்பாட்டுப் பொறிமுறை வலுவுக்கு வருமுன்னதான முறைப்பாடுகளை குழு பரிசீலனை செய்யாது. இது ஒரு விதியாகும்

- குழுவிடம் கோரிக்கையினை சமர்பிக்க முன்னர் பொதுவாக சொந்த நாட்டில் சகல விதமான நிவாரணங்களையும் கேட்டிருக்க வேண்டும்.

- விளையாட்டுத்தனமான வெறுப்பூட்டும் மற்றும் முறைப்பாட்டு நடபடிமுறைகளை உரிய முறையில் பாவிக்காத முறைப்பாடுகள் போன்றவற்றை குழு நிராகரிக்கும்.

- முறைப்பாட்டாளர் அதே கோரிக்கையை பிரிதொரு உடன்படிக்கை அமைப்புக்கோ பிராந்திய பொறிமுறைக்கோ சமர்ப்பித்திருப்பின் அத்தகைய முறைப்பாட்டினை குழு பரிசீலனை செய்யாது.

- ஒரு நாடு முறைப்பாட்டுப் பொறிமுறையினை ஒதுக்கி வைத்திருப்பின் சில முறைப்பாடுகளை பரிசீலனை செய்வதற்கு குழுவுக்கு மட்டுப்பாடுகள் காணப்படும்.

உதாரணம்: அட்டவணை 3 இல் இலங்கையரால் குடியியல் அரசியல் உரிமைகளிற்கான சர்வதேச பொருத்தனைக்கமைவாக மனித உரிமைகள் குழுவிற்கு சமர்பிக்கப்பட்ட தனிப்பட்ட முறைப்பாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை 3 : மனித உரிமைகள் குழுவிற்கு அனுப்பப்பட்ட முறைப்பாடுகள்

| சமர்பித்தவர் | விடயம் | பொருத்தனையின் உறுப்புரை | மனித உரிமைகள் குழுவினால் இனங்கண்டுகொள் எப்பட்ட மனித உரிமை மீறல் உறுப்புரைகள் |
|---|---|---|---|
| விக்டர் ஐவன் 909/2002 | கருத்துவெளிப்படுத்தும் சுதந்திரம் | 2(3), 3, 19 மற்றும் 26, 14(3) (இ) | உரிய காலத்தில் வழக்கு நடவடிக்கை தாமதிக்காது மேற்கொள்ளால்-14(3) (இ) கருத்துவெளிப்படுத்தும் சுதந்திரம்- 19 |
| அன்ரனி மைக்கல் இமானுவேல் பெனான்டோ 1189/2003 | முறைப்பாட்டாளரின் பக்கச்சார்பற்ற நியாயசபை-பயினால் விசாரிக்கும் உரிமை மீறப்பட்டமை நீதிமன்றத்தினை அவமதித்தமைக்கான சிறைத்தண்டனை என்ற தீர்மானத்திற்கு எதிராக மேன்முறையீடு செய்ய வாய்ப்பின்மை தடுப்புகா-வலில் முறையற்றவிதத்தில் நடத்தியமை | 7,9,10(1), 14(1),(2),(3) (அ),(ஆ), (இ), (ஈ), (உ) மற்றும் 5, 19(2) மற்றும் (3) | விடுதலையும் தனிநபர் பாதுகாப்புக்குமான உரிமை ஏதேச்சையான கைதும் தடுத்துவைத்தலும் - 9(1) |
| எஸ். பி. திசாநாயக்க 1373/2005 | நீதிமன்ற நடபடிமுறைகளை அவமதித்தமைக்காக தடுத்து வைத்தல் | 7,8(3)(M),9(1),14(1),(2),3(அ),(உ) மற்றும் (எ), 5, 15(1), 19(3),25(ஆ) மற்றும் 26 | விடுதலையும் தனிநபர் பாதுகாப்புக்குமான உரிமை ஏதேச்சையான கைதும் தடுத்து- வைத்தலும் - 9(1) கருத்துவெளிப்படுத்தும் சுதந்திரம்- 19(1) தேர்தலில் பங்குபெறவும் வாக்களிக்க-வுள்ள உரிமை – 25(ஆ) |
| எஸ். ஜேகதீஸ்வரசர்மா 950/ 2000 | தன்னிச்சையற்றவிதத்தில் காணாமற்போதல் | 6,7,9 மற்றும் 10 | சித்திரவதையிலிருந்தான சுதந்திரம் - 7 விடுதலையும் தனிநபர் பாதுகாப்புக்குமான உரிமை - 9 |
| ஜெயலத் ஜெயவர்த்தன 916/2000 | பகிரங்கமாக நாட்டின் தலைவரை தூற்றியமைக்காக மரண அச்சுறுத்தல் | 9(1) | விடுதலையும் தனிநபர் பாதுகாப்புக்குமான உரிமை - 9 |

### 1.2.7. நாடுகளிற்கிடையிலான முறைப்பாடுகள்

அரச திறத்தவர்கள் உடன்படிக்கை அமைப்புகளுக்கு பிரிதொரு அரச திறத்தவர் உடன்படிக்கையினை மீறுவதாக முறைப்பாடு செய்யும் ஏற்பாடுகளை பல மனித உரிமைகள் உடன்படிக்கைகள் கொண்டுள்ளன. இருப்பினும் இவ் நடபடிமுறை ஒருபோதும் பாவிக்கப்படுவதில்லை. அவ்வாறான ஏற்பாடுகளைக்கொண்ட உடன்படிக்கைகள் அட்டவணை 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 4 : நாடுகளிற்கு இடையிலான முறைப்பாட்டு நடபடிமுறைகள்**

| உடன்படிக்கை அமைப்பு | நாடுகளுக்கிடையிலான முறைப்பாடு நடபடிமுறை |
|---|---|
| சித்திரவதைக்கெதிரான குழு மற்றும் புலம்பெயர் தொழிலாளர் குழு. | சித்திவதைக்கெதிரான சமவாயத்தின் உறுப்புரை 21 மற்றும் புலம்பெயர் தொழிலாளரை பாதுகாப்பதற்கான சமமவாயத்தின் உறுப்பரை 74 இலும் குறிப்பிட்ட குழுவிற்கு முறைப்பாட்டினை கவனத்திற் கொள்ள நடபடிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளது. |
| இனப்பாரபட்சத்தினை இல்லாதொழிக்கும் குழு மற்றும் மனித உரிமைகள் குழு | இனப்பாரபட்சத்தினை இல்லாதொழிக்கும் சமவாயத்தின் உறுப்புரை 11-13 உம் குடியியல் அரசியல் உரிமைகளிற்கான சர்வதேச பொருந்தனையின் உறுப்புரை 41-43 அரச திறத்தவர்களிற்கிடையிலான பிணக்கினை தீர்ப்பதற்குரிய விரிவான நடபடிமுறையினை வகுத்துள்ளது. நாடுகள் குறித்த சமவாயத்தின் கடப்பாடுகளைப் பூரணப்படுத்தாவிட்டால் எழுந்தமான சமாதான ஆணைக்குழுவினை தாபிக்கலாம். |
| பெண்களிற்கு எதிரான பாரபட்சத்தினை இல்லாதொழிக்கும் குழு மற்றும் சித்திரவதைக்கெதிரான குழு மற்றும் புலம்பெயர் தொழிலாளர் குழு. | பெண்களிற்கு எதிரான பாரபட்சத்தினை இல்லாதொழிக்கும் சமவாயத்தின் உறுப்பரை 29, சித்திரவதைக்கெதிரான சமவாயத்தின் உறுப்புரை 30 மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களைப் பாதுகாக்கும் சமவாயத்தின் உறுப்புரை 92 அரச திறத்தவர்களிடையே சமவாயத்தின் பொருள்- கோடல் அல்லது பிரயோகத்தில் பிணக்கு ஏற்படின் முதலில் பேச்சுவார்த்தை மூலமும் அல்லது அது தோல்வியடையும் பட்சத்தில் நடுத்தீர்ப்பு மூலமும் தீர்க்கப்படும். |

### 1.2.8. விசாரணைகள்

சித்திரவதைக்கெதிரான குழு மற்றும் பெண்களுக்கெதிரான பாரபட்சத்தினை இல்லாதொழிக்கும் குழு சமவாயங்களில் கடுமையான அல்லது தொடர்ச்சியான மீறல்கள் காணப்படுதல் தொடர்பான உண்மையான தகவல்கள் கிடைக்கப்பெறின் சுயமான விசாரணைகளை ஆரம்பிக்கலாம்.

## 1.3 ஏனைய சர்வதேச பொறிமுறைகள்

### 1.3.1 ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளிற்கான உயர்தானிகர் அலுவலகம்

1993 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவின் வியான்னா என்னும் இடத்தில் இடம்பெற்ற சர்வதேச மாநாட்டில் அங்கத்துவ நாடுகளினால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளுக்கமைய ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்தானிகர் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டது.

உலக மக்களிற்காக ஐக்கிய நாடுகள் பட்டயத்தில் உரிமைகள் மற்றும் ஏனைய சர்வதேச மனித உரிமைகள் சட்டங்கள் மற்றும் சமவாயங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள உரிமைகளுக்கு மதிப்பளித்தல் முன்னேற்றல் மற்றும் பாதுகாத்தல் ஆகிய செயற்பாடுகளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகளுக்கான உயர்தானிகர் அலுவலகம் மேற்கொண்டு வருகின்றது.

இதன்போது மனித உரிமை மீறல்களை இல்லாதொழித்தல் மனித உரிமைகள் பாதுகாத்தலுக்கு சர்தேச ஒத்துழைப்பை விருத்தி செய்தல் மற்றும் மனித உரிமைகள் மற்றும் தொடர்புடைய ஐக்கிய நாடுகள் அமைப்புக்களின் சகல



*படம் 4 : ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் காரியாலய கட்டிடத்தொகுதி – ஜெனிவா*

செயற்பாடுகளையும் வலுப்படுத்தல் மற்றும் வினைத்திறனாக செயற்படுவதற்குரிய வழிவகைகள் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் உயர்தானிகரின் அலுவலகம் ஊடாக இடம்பெறுகின்றது.

ஐக்கிய நாடுகளில் மனித உரிமைகளுக்கான உயர்தானிகர் ஐக்கிய நாடுகளின் பிரதான மனித உரிமைகள் அலுவலராகவும் மனித உரிமைகளுக்கான உயர்தானிகர் அலுவலகத்தின் தலைவருமாவார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்தானிகரின் அலுவலகமானது மனித உரிமை நிலைமைகளை மேம்படுத்த தேசிய மட்டத்தில் நாடுகளுடன் சிவில் சமூகத்துடன் ஐக்கிய நாடுகள் முகவர் அமைப்புக்களுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றது.

மனித உரிமைகள் உயர்தானிகர் அலுவலகமானது ஐக்கிய நாடுகள் கட்டமைப்பிலுள்ள வெவ்வேறு மனித உரிமைகள் கண்காணிப்பு பொறிமுறைகளிற்கு செயலக ஆதரவினை வழங்குகின்றது. அத்துடன் மனித உரிமைகள் தொடர்பிலான கல்வி மற்றும் வளங்களை வழங்குவதுடன் மனித உரிமைகளின் முக்கியத்துவத்தினை சர்வதேச மற்றும் தேசிய ரீதியில் வலியுறுத்துகின்றது.

### 1.3.2 சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (International Criminal Court)

சர்வதேச குற்றவியல் நீதிமன்றமானது முதலாவதும் நிரந்தரமானதுமான சர்வதேச நீதிமன்றமாகும். இது ரோம் விதிமுறைகள் மூலம் ஆளப்படுகின்றது. இது தாபிக்கப்பட்டதன் நோக்கம் சர்வதேச சமூகத்தினால் மிகப்பாரிய குற்றங்களாக கருதப்படும் இன அழிப்பு, மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றம், யுத்தக்குற்றங்கள் மற்றும் ஆக்கிரமிப்பு ஆகியவற்றை புலனாய்வு செய்து வழக்கு தாக்கல் செய்து குற்றமிழைத்தவர்களுக்கு தண்டனை வழங்குவதாகும்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் நான்கு பிரதான பகுதிகளைக் கொண்டுள்ளது. அவையாவன,

- தலைமையகம்
- வழக்கு இடம்பெறும் இடம்
- வழக்கு நடத்துபவரின் காரியாலயம்
- பதிவகம்.



*படம் 5 : சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்*

இவை பிரத்தியேக பங்கினையும் ஆணையையும் கொண்டுள்ளது. ஒரு நாடு ரோம் விதிமுறையினை ஏற்றுக்கொண்டால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அப்பாரிய குற்றத்தினை விசாரணை செய்யும் நியாயாதிக்கம் கிடைக்கப்பெறும் அதேவேளை பாதுகாப்புசபையின் பிரகடனத்திற்கு அமைய ரோம் விதிமுறைகளை ஏற்றுக்கொள்ளாத நாடுகளையும் விசாரிக்கும் நியாயாதிக்கம் உள்ளது.

## 2.0 பிராந்திய மனித உரிமை பொறிமுறைகள்

பிராந்திய மனித உரிமை பொறிமுறைகளானது மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் முன்னேற்றுவதற்குமான சர்வதேச முறைமைக்கு முக்கியமான தூண்களாகக் காணப்படுகின்றது. தற்போது ஐந்து பிராந்திய மனித உரிமை பொறிமுறைகளை வேறுபடுத்தி காணக்கூடியதாகவுள்ளது. இவற்றுள் சில பிராந்திய மனித உரிமை பொறிமுறைகளானது மிக முன்னேற்றகரமான மனித உரிமைகள் பாதுகாப்பு முறைமையை தீவிர நிலைமைகளின் போது கையாளக்கொண்டுள்ளது.

குறிப்பாக ஐரோப்பிய பிராந்திய மனித உரிமைகள் பொறிமுறையானது மிகச்சிறப்பாக செயற்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

ஐந்து பிரதான பிராந்திய பொறிமுறைகளாவன,

- ஐரோப்பா
- அமெரிக்காக்களிற்கிடையிலான முறைமை
- ஆபிரிக்கா
- அரபுலகம் / குழு.
- ஆசியான்

இதைவிட தற்போது உபபிராந்திய ரீதியாகவும் மனித உரிமை பொறிமுறைகளை நாடுகள் இணைந்து உருவாக்குவதை காணக்கூடிய - தாகவுள்ளது. குறிப்பாக சார்க் அமைப்பினை குறிப்பிடலாம்.

அட்டவணை 5இல் சில பிராந்திய ரீதியான மனித உரிமை பொறிமுறைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## அட்டவணை 5 : பிராந்திய பொறிமுறைகள்

| பிராந்தியம் | நிறுவனம்/ அமைப்பு | சுருக்கமான விளக்கம் |
|---|---|---|
| ஆபிரிக்க பிராந்தியம் | மனிதன் மற்றும் மக்களின் உரிமைகளிற்கான ஆபிரிக்க ஆணைக்குழு | இது ஆபிரிக்க பட்டயத்திற்கு அமைவாக தாபிக்கப்பட்டது. இதனுடைய பிரதான தொழி-ற்பாடானது ஆபிரிக்காவினுள் மனித மற்றும் மக்களின் உரிமைகளை முன்னேற்றுவதும் அவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதுமா-கும். இது பாரதூரமான மனித உரிமை மீறல்களில் அதிக கவனம் செலுத்துகின்றது. |
| | மனித உரிமைகள் மற்றும் மக்களின் உரிமைகளிற்கான ஆபிரிக்க நீதிமன்றம் | ஆபிரிக்க பட்டயத்தின் பின்னேட்டின் மூலம் 1998 இல் ஆபிரிக்க மனித உரிமைகள் நீதிமன்றம் தாபிக்கப்பட்டது. |
| அமெரிக்க பிராந்தியம் | அமெரிக்காக்களிற்கிடையிலான மனித உரிமைகளுக்கான ஆணைக்குழு | இது பாரிய மற்றும் தொடர்ச்சியான மனித உரிமைகள் மீறல்களை ஆவணப்படுத்தும். |
| | அமெரிக்காக்கிடையிலான நீதிமன்றம் | தனிப்பட்ட முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்குரிய சட்ட ஏற்பாடுகளை வழங்குகின்றது. இவ் நீதிமன்றம் மதியுரை மற்றும் விசாரிக்கும் நியாயாதிக்கத்தினை கொண்டுள்ளது. |
| | அமெரிக்காக்கிடையிலான பெண்களுக்கான ஆணைக்குழு | பெண்கள் உரிமைகளை பாதுகாத்தலும் முன்னேற்றலும் இதன் நோக்கமாகும். சமூகத்தில் பெண்கள் ஆண்கள் சமத்துவமான பங்களிப்பி-னை முன்னேற்றல் |
| ஐரோப்பிய பிராந்தியம் | ஐரோப்பிய மனித உரிமைகள் ஆணைக்குழு | ஐரோப்பிய சமவாயத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. மனித உரிமைகள் மீறப்பட்ட நபர் முறைப்பாடு செய்யலாம். |
| | மனித உரிமைகள் மற்றும் நீதிக்கான ஐரோப்பிய நீதிமன்றம் | அங்கத்துவ நாடுகளின் தேசியத்தவர்களின் உரிமை சமூக சட்டத்தினைத் தீர்த்து வைத்தல். |
| அரபுலகம் | அரபு மனித உரிமைகள் குழு | இது 2009 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. இக்குழு அரபு மனித உரிமைகள் பட்டயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளை கண்காணிக்கி-ன்றது. |
| தென்கிழக்கு ஆசியா | ஆசியான் அரசாங்கங்களுக்கிடையிலான மனித உரிமைகள் ஆணைக்குழு | ஆசியான் பட்டயத்தின் உறுப்புரை 14இற்கமைய தாபிக்கப்பட்டது. |

## 3.0 தேசிய மனித உரிமை பொறிமுறைகள்

தேசிய மனித உரிமைகள் பொறிமுறையை இரண்டாக வகைப்படுத்தலாம். அடிப்படை உரிமை அடிப்படையிலான பொறிமுறைகள் மற்றும் ஏனைய மனித உரிமை பொறிமுறைகள்.

## 3.1 அடிப்படை உரிமை அடிப்படையிலான பொறிமுறைகள்.

அடிப்படை உரிமைகளை உத்தரவாதப்படுத்துவதற்கும் அவ்வுரிமைகள் மீறப்படுவதிலிருந்து பாதுகாக்கவும் பிரதானமாக பின்வரும் அமைப்புக்கள் காணப்படுகின்றன.

- உயர் நீதிமன்றம்
- பாராளுமன்றத்திற்குரிய நிர்வாக ஆணையாளர் (ஒம்பூட்ஸ்மன்)
- இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

### 3.1.1 உயர் நீதிமன்றம்

1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் ஏற்பாட்டிற்கமைய உயர்நீதிமன்றமானது உயர்வானதும் இறுதியானதுமான நீதிமன்றமாகும். இது அரசியலமைப்பின் பிரகாரம் அதிக அதிகாரங்களை பிரயோகிக்க வலுவூட்டப்பட்டுள்ளது.



*படம் 6 : உயர் நீதிமன்றம்*

பிரதம நீதியரசர் உட்பட உயர்நீதிமன்ற நீதியரசர்கள் 11 பேர் உள்ளனர். இதன் நியாயாதிக்கம் அரசியலமைப்பின் உறுப்புரை 118 இல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவையாவன,

- அரசியலமைப்பு விவகாரம் தொடர்பில்
- அடிப்படை உரிமைகள் விடயத்தில்
- இறுதியான நீதிமன்ற நியாயாதிக்கம்
- அரசியலமைப்பு நியாயாதிக்கம்.
- தேர்தல் முறைப்பாடுகள். (ஜனாதிபதித் தேர்தல்)
- பாராளுமன்ற சிறப்புரிமைகள் மீறப்படும் போது
- பாராளுமன்றத்தினால் உருவாக்கப்படும் சட்டம் அல்லது சட்டம் தொடர்பான விடயங்களின் போது
- சட்டத்தரணிகளை அனுமதித்தல், செயற்படுதல், நீக்கல் மற்றும் புதுப்பித்தல்.

1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் உறுப்புரை 17 இற்கமைய ஒருவருடைய அடிப்படை உரிமையானது நிர்வாக அல்லது நிறைவேற்று நடவடிக்கையினால் மீறப்பட்ட அல்லது மீறப்படும்போது உயர்நீதிமன்றத்தில் நிவாரணம் பெறலாம். 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் உறுப்புரை 126 இல் உயர்நீதிமன்றத்திற்கான அடிப்படை உரிமைகள் நியாயாதிக்கம் மற்றும் அதனைப் பிரயோகித்தல் தொடர்பில் ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது.

### அ) முறைப்படியான முறைப்பாடு செய்யும்முறை

- அரசியலமைப்பின் 126(2) இற்கமைய மீறல் இடம்பெற்று ஒரு மாதத்திற்குள் குறித்த நபரால் அல்லது அவர் சார்பிலான சட்டத்தரணியினால் முறைப்பாடு செய்யப்படலாம்.
- குறித்த மீறல் தொடர்பான நிவாரணத்தினை அல்லது நஷ்டஈட்டினை கோரி தற்போதைய நீதிமன்ற விதிகளிற்கமைய எழுத்து மூலமான மனு மற்றும் சத்தியக்கடதாசி மூலம் விண்ணப்பிக்கலாம்.
- இருப்பினும் இவ்வரையறையானது வழக்குகளின் தன்மைக்கேற்ப உயர்நீதிமன்றத்தினால் பொருள்கோடல் செய்யப்பட்டுள்ளமை பல்வேறு வழக்குதீர்ப்புக்கள் மூலம் தெளிவாகின்றது.

உதாரணம்: சிறியாணி சில்வா எதிர் இத்தமல்கொட(2003 2SLR 63) மற்றும் வாவலேகே ராணி பெணான்டோ எதிர் பொறுப்பதிகாரி – சிறுகுற்றப்பிரிவு, சீதுவ பொலிஸ் நிலையம் போன்ற வழக்குகளில் சித்தரவதையின் பின்னர் இறந்த நபர் சார்பாக அவர்களது மனைவி வழக்கு தாக்கல் செய்யலாம் எனத்தீர்க்கப்பட்டது.

## ஆ) முறைசாரா முறைப்பாடு செய்யும்முறை

- கௌரவ உயர்நீதியரசர் அவர்களிற்கு நேரடியாக கடிதம் மூலம் தனக்கேற்பட்ட மனித உரிமை மீறலை விண்ணப்பிக்கலாம்.

- உயர்நீதியரசர் அவ்வுரிமை மீறல் முகத்தோற்றமளவில் அடிப்படை உரிமை மீறலாக இருப்பின் அக்கடிதத்தினை உயர்நீதிமன்ற விதி 44(7) (ஆ) இற்கமைய சட்டத்தரணிகள் சங்கம் அல்லது சட்ட உதவி ஆணைக்குழுவிற்கு அவசியமான நடவடிக்கைக்காக ஆற்றுப்படுத்துவார்.

குறைந்தபட்சம் இரண்டு நீதியரசர்கள் கொண்ட குழாமினால் குறித்த விண்ணப்பம் பரிசிலிக்கப்பட்டு வழக்கினை கொண்டு நடத்த முடியுமா இல்லையா எனப்பரிசிலித்து அனுமதி வழங்கும் அல்லது நிராகரிக்கும்.

உயர்நீதிமன்றத்தினால் அடிப்படை உரிமைகள் தொடர்பில் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் பரந்தளவில் பொருள்கோடல் செய்யப்பட்டு பல்வேறு வழக்குகள் தீர்க்கப்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அதேவேளை அடிப்படை உரிமைகள் தொடர்பாக பல்வேறு கோணங்களில் பார்க்கப்படுவதுடன் சர்வதேச மனித உரிமை உடன்படிக்கைகள் மற்றும் பிரகடனங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நம்நாட்டு சட்டங்களுக்குள் அறிமுகப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கின்றது.

### 3.1.2 பாராளுமன்றத்திற்குரிய நிர்வாக ஆணையாளர் (ஒம்பூட்ஸ்மன்)

இலங்கை அரசியல் அமைப்பின் உறுப்புரை 156 இற்கமைய பாராளுமன்றத்திற்குரிய நிர்வாக ஆணையாளர் நியமிக்கப்படுகின்றார். 1981 ஆம் ஆண்டில் 17 ஆம் இலக்க திருத்தப்பட்டவாரான பாராளுமன்றத்திற்குரிய நிர்வாக ஆணையாளருக்கான சட்டம்

அரசியலமைப்பின் உறுப்புரை 156 இன் பிரகாரம் ஒம்பூட்ஸ்மன் தாபிக்கப்படுவதற்குரிய ஏற்பாட்டினை கொண்டுள்ளது.

பகிரங்க அலுவலர் அல்லது பகிரங்க கூட்டுத்தாபனம், உள்ளூர் அதிகார சபை அல்லது அவை போன்ற ஏனைய நிறுவனங்களின் உத்தியோகத்தரால் அடிப்படை உரிமை அல்லது ஏனைய அநீதிகளின் மீறல்கள் பாராளுமன்ற உறுப்பினரால் பாராளுமன்றக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும். பகிரங்க மனுவை ஒம்பூட்ஸ்மன் புலனாய்வு செய்து அறிக்கை சமா்ப்பிக்கும் ஏற்பாடானது 1981 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சட்டத்தின் பிரிவு 10 இல் குறிப்பிடப்படுகின்றது.

எவரேனும் நபரிற்கு பகிரங்க அலுவலா் அல்லது பிரதான சட்டத்தின் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலரினால் அடிப்படை உரிமை அல்லது அநீதியால் மீறல்கள் ஏற்பாட்டால் நேரடியாக ஒம்பூட்ஸ்மனிடம் முறையீடு செய்யக்கூடிய ஏற்பாடானது 1991 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க திருத்தப்பட்டவாறான பாராளுமன்ற நிர்வாக ஆணையாளா் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டள்ளது.

ஒம்பூட்ஸ்மனுக்கு குறித்த முறைப்பாடு தொடா்பில் புலனாய்வு செய்து அறிக்கையிடும் தற்றுணிவு அதிகாரம் உள்ளது. நிகழ்வுகளின் அடிப்படையில் குறித்த அதிகாரவமைப்பால் ஏதேனும் அடிப்படை உரிமை மீறல் அல்லது அநீதி இழைக்கப்பட்டால் அவா் பரிந்துரைகளை ஆக்கலாம். இவற்றிற்கு மேலதிகமாக பகிரங்க முறைப்பாட்டுக்குழுவிடம் அல்லது பாராளுமன்றத்துக்கு அறிவிக்கலாம்.

ஒம்பூட்ஸ்மனினால் வழங்கப்பட்ட பரிந்துரையை குறித்த நிறுவாகத்தின் தலைவா் பின்பற்றாவிட்டால் ஜனாதிபதி அல்லது பாராளுமன்றத்திற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு அறிக்கையிடலாம்.

### 3.1.3 இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது 1996 ஆம் ஆண்டின் 21 இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச்சட்டத்தினால் மனித உரிமைகளை பாதுகாக்கவும் முன்னேற்றவும் தாபிக்கப்பட்ட சுயாதீனமான ஆணைக்குழுவாகும். இவ்வாணைக்குழுவிற்குரிய அங்கத்தவர்கள் 18 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் பிரகாரம் பாராளுமன்ற பேரவையினால் தெரிவு செய்யப்படுகின்றனர். இது தனது செயற்பாடுகளை மேற்கொள்ள பரந்த அதிகாரத்தினைக்கொண்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச்சட்டத்தின் பிரிவு 11 இற்கமைய ஆணைக்குழுவின் அதிகாரங்களாவன,

- அடிப்படை உரிமைகள் மீறப்படல் தொடர்பில் புலனாய்வு மற்றும் விசாரணையை மேற்கொள்ளல்.




*படம் 7 : இ. ம. ஆ. தலைமையகம்*

- எந்த நீதிமன்றத்திலும் முடிவுறாத அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்கில் அவ்நீதிமன்ற அனுமதியுடன் நீதிமன்ற செயற்பாடுகளில் இடையீடு செய்தல்.

- தடுப்பு நிலையங்களை பரிசோதித்தலும் தடுப்பிலுள்ளவர்களின் நலன்புரிகளை கண்காணித்தலும் தேவையான சிபாரிசுகளை முன்வைத்தலும்.
- உயர் நீதிமன்றத்தினால் ஆணைக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தும் எந்தவொரு பிரச்சினைகள் சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தின் பணிப்புக்கமைய நடவடிக்கை எடுத்தல்.

- மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து அவ் ஆய்வு முடிவுகளை மக்களிடையே பரப்புதலும் விநியோகித்தலும் அதற்காக மக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்வுகளை நடாத்துதல்.

- இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு பொருத்தமானதும் அவசியமானதுமான ஏற்புடைய ஏனைய செயற்பாடுகளையும் மேற்கொள்ளல்.

ஆணைக்குழுவின் பணிகள் சட்டத்தின் பிரிவு 10 இல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

- சகல அரச செயற்பாடுகளும் இலங்கையின் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கமைய செயற்படுவதை உறுதிப்படுத்தல்.

- அடிப்படை உரிமைகளுக்கமைய சட்டங்களை ஆக்கல், நிர்வாக நடப்படிமுறைகள் மற்றும் செயற்றிட்டங்கள் தயாரிக்கும் போது அரசுக்கு உதவுதல் மற்றும் மதியுரை வழங்குதல்.

- அடிப்படை உரிமைகள் மீறல் அல்லது மீறப்பட்டுள்ளமை தொடர்பிலான முறைப்பாடுகளை புலனாய்வு செய்தலும் விசாரணை செய்தலும் மத்தியஸ்தம் மற்றும் இணக்கப்பாட்டுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுத்தலும்.

- இலங்கையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் உடன்படிக்கையின் கடப்பாடுகளிற்கு அமைய சட்டம் மற்றும் நிர்வாக நடபடிமுறைகள் சம்பந்தமாக அரசுக்கு பரிந்துரை வழங்கல்.

- சர்வதேச மனித உரிமைகள் உடன்படிக்கைகள் மற்றும் மனித உரிமைகள் துறையில் சர்வதேச தீர்மானங்கள் தொடர்பில் அரசுக்கு மதியுரை வழங்குதல்.
- நாட்டினுள் மனித உரிமைகள் தொடர்பான அறிவை முன்னேற்றல்.

## 3.2 ஏனைய மனித உரிமை பொறிமுறைகள்

### 3.2.1 சட்ட உதவி ஆணைக்குழு (Legal Aid Commission)

1978 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்திற்கமைய தாபிக்கப்பட்டுள்ளது. சட்ட உதவி ஆணைக்குழுவூடாக பின்வரும் உதவிகள் வழங்கப்படுகின்றன.

- குடியியல் வழக்குகளை கையாள்தல்
- குற்றவியல் வழக்குகளை கையாள்தல்
- பிணை எடுக்க முடியாதவர்களிற்கு பிணை எடுக்க நீதிமன்றத்திற்கு செல்லுதல்
- உரிமை மீறப்பட்டவர்கள் சம்பந்தமன வழக்குகளை கையாள்தல்
- சட்ட ஆலோசனை வழங்கல்
- சட்ட உதவி சேவையினை முன்னேற்றல்

உரிமை மீறல்கள் தொடர்பில் சட்ட உதவி ஆணைக்குழுவின் மனித உரிமைகள் பணியகம் மூலமாக பின்வரும் முறைகளில் உதவிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- பிரதான காரியாலயத்தில் அல்லது பிரதேச காரியாலயங்களில் செய்யப்படும் உரிமை மீறல் முறைப்பாடுகள் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் ஆஜராதல்.
- இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் ஆற்றுப்படுத்தப்படும் உரிமை மீறல் முறைப்பாடுகளை கையாள்தல்

- நபா் ஒருவரின் மீறப்பட்ட அல்லது மீறப்படவுள்ள அடிப்படை உரிமைகள் மற்றும் மொழி உரிமை தொடா்பில் நேரடியாக உயா்நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்தால் உயா் நீதிமன்றமானது உயா்நீதிமன்ற ஒழுங்கு விதி 44(7) (ஆ) இற்கமைய பதிவாளரினால் சட்ட உதவி ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்படும். அவ்வழக்கு நடவடிக்கைக்கு உதவுதல்

### 3.2.2 சட்ட ஆணைக்குழு (Law Commission)

1969 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க நீதி ஆணைக்குழுச்சட்டத்தினால் சட்ட சீா்திருத்தங்களை முன்னேற்றுவதற்காக தாபிக்கப்பட்டதாகும். அதேவேளை சட்டம் தொடா்பாக மக்களிற்கு அறிவூட்டும் கல்வி நிகழ்ச்சிகளையும் மேற்கொள்கின்றன. இச்சட்டத்திற்கு அமைவாக தவிசாளா் உட்பட 15 அங்கத்தவா்கள் 5 வருடங்களிற்கு ஜனாதிபதியினால் நியமிக்கப்படுவா். இதன் பணிகளாவன,

- சட்ட சீா்திருத்தங்களை மேற்கொள்ளல்
- சட்டத்தில் பொருத்தமற்றவற்றை அகற்றல்
- காலத்துக்கு ஒவ்வாதவற்றை அகற்றல்
- சட்டத்தை இலகுவாக்கல் மற்றும் புதுப்பித்தல்
- சட்டத்தினை சிங்கள, தமிழ் ஆங்கில மொழிகளில் கிடைப்பதற்கு வழிவகை செய்தல்

### 3.2.3 இணக்கசபை (Mediation Board)

1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1997 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க திருத்தச்சட்டம் ஆகியவற்றிற்கு அமைய இணக்கசபை செயற்படுகின்றது. 3 வருடங்களிற்கு ஒருதடவை 5 உறுப்பினா்கள் ஜனாதிபதியால் இணக்கசபை ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்படுவா். அவா்களில் மூவா் மேல் நீதிமன்ற அல்லது மேன்முறையீட்டு நீதிபதிகளாகவும் அவா்களில் ஒருவா் தவிசாளராகவும் தெரிவு செய்யப்படுவா்.

ஆணைக்குழுவின் சுயாதீன தன்மையை நிலைநிறுத்த இளைப்பாறிய உயர்நிலை நீதிமன்ற நீதியரசர் நியமிக்கப்படுவர். இதற்கான காரணம் என்னவெனில் சமனற்ற தன்மையை இல்லாதொழிப்பதற்காகவாகும்.

இச்சபைக்கு ஆற்றுப்படுத்தப்படும் சில பிணக்குகளை அல்லது இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களை சட்டரீதியான வழிமுறைகளில் உண்மையாக காரணங்களை கண்டறிந்து திறத்தவர்களின் சம்மதத்துடன் சமாதானமாக தீர்த்துவைக்கும். தீத்துவைக்க முடியாவிட்டால் பிரதான மத்தியஸ்தரின் கையொப்பத்துடன் தீர்வு எட்டப்படவில்லை என்பதற்கான சான்றிதழ் வழங்கப்படும்.

### 3.2.4 ஜனாதிபதி விசேட விசாரணை ஆணைக்குழு (Special Presidential Commissions of Inquiry)

பகிரங்க அமைப்பு அல்லது உள்ளூர் அதிகாரவமைப்பின் நிர்வாகம், ஏதேனும் சட்ட நிர்வாக அல்லது நிர்வாக நீதி, ஏதேனும் பகிரங்க அதிகாரியின் நடத்தை அல்லது பொதுமக்கள் அக்கறை அல்லது பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் சமூகநலன் கருதி ஜனாதிபதி உரிய தகவல்களை பெற்றுக்கொள்ள விசாரணை ஆணைக்குழுக்களை தாபிக்கலாம். இவ்வாறான விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அங்கத்தவர்களாக உயர்நீதிமன்ற நீதியரசர்கள் அல்லது ஏனைய நீதிமன்றங்களின் நீதிபதிகள் நியமிக்கப்படுவர். இதற்கு மாவட்ட நீதிபதிகளிற்கு கீழான நீதிபதிகள் தெரிவு செய்யப்படமாட்டார்கள்.

ஜனாதிபதிகளினால் தாபிக்கப்பட்ட அவ்வாறான சில ஆணைக்குழுக்கள் பின்வருமாறு,

- 1977 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 13 முதல் செப்டம்பர் 15 வரை இடம்பெற்ற சம்பவங்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழு
- இனவன்முறை தொடர்பில் உண்மையை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழு(1981-1984)
- கொக்கட்டிச்சோலை சம்பவத்தினை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு
- பட்டலந்த வீட்டுத்திட்டத்தில் சட்டமுரனாக தடுத்துவைத்திருத்தல் மற்றும் சித்திரவதை செய்தமை தொடர்பான விசாரணை ஆணைக்குழு

- பிந்துனுவேவ புனர்வாழ்வு நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட படுகொலை தொடர்பான விசாரணை ஆணைக்குழு
- தன்னிச்சையற்ற முறையில் ஆட்களை அகற்றல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு
- தன்னிச்சையற்ற முறையில் ஆட்களை அகற்றல் தொடர்பான மூன்று வலய ஆணைக்குழு மற்றும் நாடலாவிய ஆணைக்குழு
- யுத்தத்தின் போது ஏற்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் புலனாய்வு செய்வதற்கான கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் ஒருமைப்படுத்தும் ஆணைக்குழு
- மாத்தளை மனித புதைகுழி தொடர்பான விசாரணைக்கான ஜனாதிபதி ஆணைக்குழு
- காணமற்போனரை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு

### 3.2.5 ஏனைய பொறிமுறைகள்

இப்பொறிமுறைகள் குறிப்பாக ஒரு குழுவின் உரிமைகள் தொடர்பில் அல்லது குறித்த ஒரு விடயம் தொடர்பில் உள்ளூர் சட்டத்தினால் குறித்த நோக்கினை அடைய தாபிக்கப்பட்டுள்ள அமைப்புக்களாகும். அட்டவணைக 6இல் அவ்வாறான சில அமைப்புக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 6 : ஏனைய பொறிமுறைகள்**

| குழு உரிமை / விடயம் | நிறுவனங்கள் |
|---|---|
| சிறுவர் | • தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை<br>• சிறுவர் நன்நடத்தை மற்றும் பராமரிப்பு திணைக்களம்<br>• சிறுவர் பெண்கள் பிரிவு – பொலிஸ் திணைக்களம்<br>• தொழில் திணைக்களம்<br>• சமூக சேவைகள் திணைக்களம்<br>• சிறுவர்களுக்கான குழு / சிறுவர் செயலகம்<br>• கல்வித்திணைக்களம்<br>• பிரதேச செயலகம்<br>• சுகாதாரத் திணைக்களம்<br>• நீதவான் நீதிமன்றம்<br>• மேல் நீதிமன்றம்<br>• மாவட்ட நீதிமன்றம் |
| பெண்கள் | • பெண்களுக்கான தேசிய குழு<br>• சிறுவர் பெண்கள் பிரிவு – பொலிஸ் திணைக்களம்<br>• சுகாதார திணைக்களம்<br>• சமூக சேவைகள் திணைக்களம்<br>• தொழில் திணைக்களம்<br>• பிரதேச செயலகம்<br>• நீதவான் நீதிமன்றம்<br>• மேல் நீதிமன்றம்<br>• மாவட்ட நீதிமன்றம் |
| புலம்பெயர் தொழிலாளர்கள் | • இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்<br>• குடிவரவு குடியகழ்வு திணைக்களம்<br>• அந்நிய நாட்டு பிரதிநிதி திணைக்களம் - வெளிவிவகார அமைச்சு |
| மாற்று திறனாளிகள் | • சமூகசேவைகள் திணைக்களம்<br>• மாற்று திறனாளிகளுக்கான தேசிய பேரவை<br>• மனநல பராமரிப்பிற்கான தேசிய நிறுவனம்<br>• பிரதேச செயலகம் |

| | |
|---|---|
| முதியோர் | • சமூக சேவைகள் திணைக்களம்<br>• முதியோருக்கான தேசிய பேரவை<br>• பிரதேச செயலகம் |
| கல்வி | • கல்வித்திணைக்களம்<br>• தொழில் பயிற்சி திணைக்களம்<br>• தேசிய கல்வி நிறுவனம்<br>• பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு<br>• கல்விச் சேவை ஆணைக்குழு |
| சுகாதாரம் | • சுகாதாரத் திணைக்களம்<br>• சுகாதார மருத்துவ அலுவலர் காரியாலயம்<br>• உள்ளூராட்சி சபைகள் |
| சமூகப் பாதுகாப்பு | • சமூர்த்தி அதிகாரசபை<br>• சமூக சேவைகள் திணைக்களம்<br>• ஓய்வூதியத் திணைக்களம் |
| உணவு | • விவசாயத் திணைக்களம்<br>• கமநல சேவைகள் திணைக்களம்<br>• நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை<br>• உணவு திணைக்களம்<br>• இலங்கை தர நிறுவனம் |
| தொழில் | • தொழில் திணைக்களம்<br>• தொழில் நியாயசபை<br>• கைத்தொழில் நீதிமன்றம்<br>• பகிரங்க சேவைகள் ஆணைக்குழு<br>• மேன்முறையீட்டு நியாய சபை |
| மொழி | • தேசிய மொழித் திணைக்களம்<br>• தேசிய மொழி ஆணைக்குழு |
| சூழல் | • மத்திய சுற்றாடல் அதிகாரசபை<br>• கரையோர பாதுகாப்பு திணைக்களம்<br>• கடல் மாசடைதல் பாதுகாப்பு அதிகாரசபை<br>• அனர்த்த முகாமைத்துவ நிலையம் |

**முடிவு:**

மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கு சர்வதேச, பிராந்திய மற்றும் தேசிய பொறிமுறைகள் பெரிதும் உதவுகின்றன. அவைகளை வலுப்படுத்தி வினைத்திறனாக செயற்படுவதற்குரிய வழிவகைகளை மேற்கொள்ள யாவரும் உதவ வேண்டும். இதனூடாகவே இப்பொறிமுறைகளின் முழுப்பயனையும் மக்கள் அடைய முடியும்.

## உசாத்துணைகள்:

- ஐக்கிய நாடுகள் பட்டயம்
- ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 60/251 இலக்க பிரகடனம்
- Fact Sheet No: 30 The United Nations Human Rights Treaty System: An introduction to the Core Human Rights treaty and the treaty bodies
- ரோம் விதிமுறைகள்
- ஆபிரிக்க பட்டயம்
- ஐரோப்பிய சமவாயம்
- ஆசியான் பட்டயம்
- மனித உரிமைகளிற்கான அரபு பட்டயம்
- இலங்கை அரசியலமைப்பு – 1978
- இலங்கை அரசியலமைப்பின் 18 ஆம் திருத்தம்
- 1996 ஆம் ஆண்டின் 21 இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டம்.
- 1981 ஆம் ஆண்டின் 17 இலக்க பாராளுமன்ற நிர்வாகத்துக்குரிய ஆணையாளர் சட்டம்
- 1991 ஆம் ஆண்டின் 08 இலக்க பாராளுமன்ற நிர்வாகத்துக்குரிய ஆணையாளர் திருத்தச் சட்டம்
- 1988 ஆம் ஆண்டின் 72 இலக்கச் இணக்கசபை சட்டம்
- 1997 ஆம் ஆண்டின் 15 இலக்க இணக்கசபை திருத்தச் சட்டம்
- 1969 ஆம் ஆண்டின் 32 இலக்க நீதி ஆணைக்குழுச்சட்டம்
- 1978 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்ட உதவி ஆணைக்குழுச் சட்டம்

## இணையத்தளங்கள்

- www.icc
- www.ohchr.org
- www.Supreme Court.lk
- www.ohchr.org./EN/HRBodies/HRC
- www.icj-cij.org
- www.un.org/en/ecosco
- www.gov.lk
- http://www.legalaid.gov.lk
- http://www.justiceministry.gov.lk

இணைப்பு 1: சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் தொடர்பு விபரங்கள்

| அமைப்பின் பெயர் | முகவரி | தொலைபேசி | தோலைநகல் | மின்னஞ்சல |
|---|---|---|---|---|
| Office of the United Nations High Commissioner for Human Rights (OHCHR)<br>ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்தானிகர் அலுவலகம் | Palais des Nations<br>CH-1211 Geneva 10, Switzerland | +41229179220 | | InfoDesk@ohchr.org |
| Special Procedures Division - Human Rights Council<br>விசேட நடபடிமுறை பிரிவு – மனித உரிமைகள் பேரவை | Special Procedures Division<br>c/o OHCHR-UNOG<br>8-14 Avenue de la Paix<br>1211 Geneva 10<br>Switzerland | | +41 22 917 90 06 | urgent-action@ohchr.org |
| Complaint Procedure unit – Human Rights Council<br>முறைப்பாட்டு நடபடிமுறை அலகு - மனித உரிமைகள் பேரவை | Complaint Procedure Unit<br>Human Rights Council Branch<br>Office of the United Nations High Commissioner for Human Rights<br>United Nations Office at Geneva<br>CH-1211 Geneva 10, Switzerland | | (41 22) 917 90 11 | CP@ohchr.org |
| Human Rights Committee (CCPR)<br>மனித உரிமைகள் குழு | UNOG-OHCHR<br>CH-1211 Geneva 10<br>(Switzerland) | +41 22 917 92 61 | +41 22 917 90 08 | ccpr@ohchr.org |
| For individual complaints<br>தனிப்பட்ட முறைப்பாடுகள் | Petitions Team<br>Office of the High Commissioner for Human Rights<br>United Nations Office at Geneva<br>1211 Geneva 10<br>(Switzerland) | | + 41 22 917 9022 (particularly for urgent matters) | petitions@ohchr.org |

| | | | | |
|---|---|---|---|---|
| Committee on Economic, Social and Cultural Rights (CESCR)<br>பொருளாதார சமூக கலாசார உரிமைகள் குழு | UNOG-OHCHR<br>CH-1211 Geneva 10<br>(Switzerland) | +41 22 917 90 00 | +41 22 917 90 08 | cescr@ohchr.org |
| Committee on the Elimination of Racial Discrimination (CERD) | UNOG-OHCHR<br>CH-1211 Geneva 10<br>(Switzerland) | +41 22 917 97 57 | +41 22 917 90 08 | cerd@ohchr.org |
| இனப்பாரபட்சத்தினை இல்லாதொழிக்கும் குழு<br><br>For individual complaints<br>தனிப்பட்ட முறைப்பா-டுகள் | Petitions Team<br>Office of the High Commissioner for Human Rights<br>United Nations Office at Geneva<br>1211 Geneva 10<br>(Switzerland) | | + 41 22 917 9022 (particularly for urgent matters) | tb-petitions@ohchr.org |
| Committee on the Elimination of Discrimination against Women (CEDAW) | UNOG-OHCHR<br>CH-1211 Geneva 10<br>(Switzerland) | +41 22 917 94 43 | +41 22 917 90 08 | cedaw@ohchr.org |
| பெண்களிற்றெதிரான பாரபட்சங்களை இல்லாதொழிக்கும் குழு | | | | |
| For individual complaints<br>தனிப்பட்ட முறைப்பாடுகள் | Petitions Team<br>Office of the High Commissioner for Human Rights<br>United Nations Office at Geneva<br>1211 Geneva 10<br>(Switzerland) | | + 41 22 917 9022 (particularly for urgent matters) | petitions@ohchr.org |
| Committee against Torture (CAT) | UNOG-OHCHR<br>CH-1211 Geneva 10<br>(Switzerland) | +41 22 917 97 06 | +41 22 917 90 08 | cat@ohchr.org |

| | | | | |
|---|---|---|---|---|
| சித்திரவதைக்கெதிரான குழு<br><br>For individual complaints<br>தனிப்பட்ட முறைப்பாடுகள் | Petitions Team<br>Office of the High Commissioner for Human Rights<br>United Nations Office at Geneva<br>1211 Geneva 10<br>(Switzerland) | | + 41 22 917 9022<br>(particularly for urgent matters | petitions@ohchr.org |
| Committee on the Rights of the Child (CRC) | UNOG-OHCHR<br>CH-1211 Geneva 10<br>(Switzerland) | +41 22 917 91 41 | +41 22 917 90 08 | crc@ohchr.org |
| சிறுவர் உரிமைகளுக்கான குழு<br><br>Committee on Migrant Workers (CMW)<br><br>புலம்பெயர் தொழிலாளிற்கான குழு | UNOG-OHCHR<br>CH-1211 Geneva 10<br>(Switzerland) | +41 (0) 22 917 9335 | +41(0)22 917 9008 | cmw@ohchr.org |
| For individual complaints<br>தனிப்பட்ட முறைப்பாடுகள் | Petitions Team<br>Office of the High Commissioner for Human Rights<br>United Nations Office at Geneva<br>1211 Geneva 10<br>(Switzerland) | | +41 22 917 9022<br>(particularly for urgent matters) | tb-petitions@ohchr.org |
| Committee on the Rights of Persons with Disabilities (CRPD) | UNOG-OHCHR<br>CH-1211 Geneva 10<br>(Switzerland) | +41 22 917 97 03 | +41 22 917 90 08 | crpd@ohchr.org |
| For individual complaints:<br>தனிப்பட்ட முறைப்பாடுகள் | Petitions Team<br>Office of the High Commissioner for Human Rights<br>United Nations Office at Geneva<br>1211 Geneva 10<br>(Switzerland) | | + 41 22 917 9022<br>(particularly for urgent matters) | petitions@ohchr.org |

| | | | | |
|---|---|---|---|---|
| Committee on Enforced Disappearance (CED)<br>பலவந்தமாக காணமற்போகும் குழு | UNOG-OHCHR<br>CH-1211 Geneva 10<br>(Switzerland) | +41 22 917 92 56 | +41 22 917 90 08 | ced@ohchr.org |
| International Court of Justice<br>சர்வதேச நீதிக்கான நீதிமன்றம் | Peace Palace<br>Carnegieplein 2<br>2517KJ The Hague,<br>The Netherlands | (+31)(0)70 302 2323 | (+31)(0)70 364 99 28 | |
| International Criminal Court<br>சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் | Po Box 19519<br>2500 CM, The Hague<br>The Netherlands | + 31 (0)70 515 8515 | +31 70 515 8555 | otp.informationdesk@icc-cpi.int |

இணைப்பு II: தேசிய மனித உரிமைகள் அமைப்புக்களின் விபரங்கள்

| அமைப்பு | முகவரி | தொலைபேசி | தொலைநகல் | மின்னஞ்சல் |
|---|---|---|---|---|
| உயர்நீதிமன்றம் | உயர்நிலை நீதிமன்ற கட்டிடத்தொகுதி, கல்சொரப் வீதி, கொழும்பு | 011 2 435446 | 011 2435446 | |
| ஒம்பூட்ஸ்மன் | இல. 06, எலிபாங் வீதி, கொழும்பு 05 | 011 2588798 | 0112584140 | ombudssl@sltnet.lk |
| சட்ட உதவி ஆணைக்குழு | இல. 129, கல்சொரப் வீதி, கொழும்பு | +94-11-5335329 / +94-11-5335281 | +94-11-2433618 | legalaid@sltnet.lk |
| சட்ட ஆணைக்குழு | 4 ஆம் மாடி, நீதி அமைச்சு புதிய கட்டிடம் இல. 80, நீதிமன்ற மாவத்தை, கொழும்பு 12 | +94-11-2333884 | +94-11-2333884 | seclawsl@sltnet.lk |
| இணக்கசபைகள் ஆணைக்குழு | நீதி அமைச்சு 3 ஆம் மாடி, உயர்நிலை நீதிமன்ற கட்டிடத்தொகுதி , கொழும்பு 12 | 011 2334323 | 0112334323 | |
| கரையோர பாதுகாப்பு திணைக்களம் | த.பெ. 56601000 கொழும்பு 4 வது மாடி, மீன்பிடி அமைச்சு புதிய செயலக கட்டிடம் மாளிகாவத்தை, மருதானை | 011 – 2449554<br>011 - 2438005 | | infor@coastal.gov.lk |
| சமுத்திரம் மாசடைதல் அதிகாரசபை | இல.758, 2வது மாடி, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09 | 011 – 2687520<br>011 – 2690604-5 | | infor@mepa.gov.lk |

| நிறுவனம் | முகவரி | தொலைபேசி இல | தொலைநகல் இல | மின்னஞ்சல் |
|---|---|---|---|---|
| தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை | இல. 330, தலவததுகொட வீதி, மாதிவல, சிறி ஜெவர்த்தனபுர | 011 - 2778911 - 4 துரித அழைப்பு 1929 | | ncpa@childprotection.gov.lk |
| சிறுவர் நன்நடத்தை மற்றும் பராமரிப்பு திணைக்களம் | 3 வது மாடி, 2 வது அவத்தை, செத்சிறிபாய, பத்தரமுல்ல | 011 - 2186062 | | |
| சமூக சேவைத் திணைக்களம் | 2 வது மாடி, 2 வது அவத்தை, செத்சிறிபாய, பத்தரமுல்ல | 011-2187050<br>011 - 2186275 | | dirss@sltnet.lk<br>dirss@gmail.com |
| இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் | இல. 234,டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்ல கொழும்பு 12 | 011-2879900/902 | 011 - 2879903 | infor_ccnter@slbfe.lk |
| குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் | இல.41, ஆனந்தராஜகருணா மாவத்தை, கொழும்பு 10 | 011 - 532900 துரித அழைப்பு 1962 | 011 - 2674621 | controller@immigration.gov.lk |
| தேசிய மனநல சுகாதார நிறுவனம் | அங்கொடை, கொலனாவை | 011 - 2578234-7 | | infor@nimh.health.gov.lk |
| இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபை | இல.354 / 2, நிபுனதா பியச, அல்வ்டிகல மாவத்தை, கொழும்பு 05 | 011 - 2581904 துரித அழைப்பு 011 - 7270270 | 011 - 2581904 | infor@btasl.gov.lk |

| நிறுவனம் | முகவரி | தொலைபேசி இல | தொலைநகல் இல | மின்னஞ்சல் |
|---|---|---|---|---|
| தேசிய கல்வி நிறுவனம் | த.பெ.21, கைலெவல் வீதி, மகரகம | 011 - 7601601 | | infor@nie.lk |
| தேசிய கல்வி ஆணைக்குழு | இல. 126, நாவல வீதி, நுகேகொட | 011 - 2815701 | | sponec@slt.lk |
| நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை | 1 வது மற்றும் 2 வது மாடி, சதோச பிரதான செயலக கட்டிடம், இல. 27. வோக்சோல் வீதி, கொழும்பு 02 | 011 - 7755456-7 துரித அழைப்பு 1977 | | chairmancaa@slt.lk chairman@consumeraffairs.gov.lk dgcaa@sltnet.lk |
| தொழில் திணைக்களம் | தொழில் அலுவலகம், நாரகேன்பிட்டி, கொழும்பு 05 | 011 - 2581142-43 | | doldevelop@sltnet.lk |
| அரசசேவை ஆணைக்குழு | இல.177, நாவல வீதி, நாரகேன்பிட்டி, கொழும்பு 05 | 011 - 2136600 011 - 2136650 011 - 2136700 | | infor@psc.gov.lk |
| அரச மொழி ஆணைக்குழு | இல.95, ஆனந்தராஜகருனா மாவத்தை, கொழும்பு 10 | 011 - 2699989 011 - 2670829 011 - 2660832 011 - 2670833 | | |
| அரச மொழிகள் திணைக்களம் | பாஷா மந்திரய இல.341/7, கோட்டே வீதி, இராஜகிரிய | 011 – 2888934 011 - 2888928 | | asstcommadmin@languagesdept.gov.lk |
| மத்திய சுற்றாடல் அதிகார சபை | இல. 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்ல | 011– 7877277- 80 துரித அழைப்பு 011 - 288999 | | complaints@cea.lk sunil@cea.lk |

இணைப்பு III

# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் தொடர்பு கொள்ளும் வழிமுறைகள்

(அ) பிரதான காரியாலயம்

| | | |
|---|---|---|
| முகவரி | : | இல 165, கின்சி வீதி, கொழும்பு 08. |
| தொலைபேசி | : | 011-2694925/ 2685980/ 2685981 |
| துரித அழைப்பு | : | 1996 |
| தொலைநகல் | : | 011-2694924 |
| மின்னஞ்ல் | : | sechrc@sltnet.lk |
| இணையத்தளம் | : | www.hrcsl.lk |
| தவிசாளர் | : | 011 2696470 |
| செயலாளர் | : | 011 2689558 |
| நீதிச்செயலாளர் | : | 011 2694222 |

| | | |
|---|---|---|
| பணிப்பாளர் - விசாரணைகளும் புலனாய்வும் | : | 011 2674200 |
| பணிப்பாளர் - கல்வியும் விசேட நிகழ்வுகளும் | : | 011 2686282 |
| பணிப்பாளர் - கண்கானிப்பும் மீளாய்வும் | : | 011 2673806 |
| பணிப்பாளர் - நிர்வாகமும் நிதியும் | : | 011 2662098 |

(ஆ) **பிராந்திய காரியாலயங்கள்**

| பிராந்தி காரியாலயம் | முகவரி | தொலைபேசி இல |
|---|---|---|
| கண்டி | **8/1பி, நிம்ரோஸ் வீதி, கண்டி** | 081 – 2228009 |
| மாத்தறை | **15, காளிதாச வீதி, மாத்தறை** | 041 – 2226533 |
| மட்டக்களப்பு | **24, சின்னஉப்போடை வீதி, மட்டக்களப்பு** | 065 – 2224420 |
| அனுராதபுரம் | **623/20E , பிறீமன் வீதி, அனுராதபுரம்** | 025 – 2234801 |
| திருகோணமலை | **227, பிரதான வீதி, திருகோணமலை** | 026 – 2222607 |
| வவுனியா | **26/2, வெளிவட்ட வீதி, வவுனியா** | 024 – 2222029 |
| பதுளை | **19/1B, பதுலபிட்டிய வீதி, பதுளை** | 055 – 2223030 |
| அம்பாரை | **4ம் மைல் கல், உஹண வீதி, ஹெறறன்காவ, அம்பாரை** | 063 - 2222340 |
| கல்முனை | **161/1, பிரதான வீதி, கல்முனை** | 067 – 2229728 |
| யாழ்ப்பாணம் | **1,3 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்** | 021 – 2222021 |